டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியை வணக்கத்தோடு தெரிவித்துக்கொண்டு வினாவுக்கு விடை அளிக்கிறேன்.

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் இல்லை என்று சொன்னதில்லை. இருந்த போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அடுத்த ஆண்டாவது உப்பிலியாபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது துறையூர் நகரில் தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவிடம் எந்தத் திட்டமும் இல்லை. எனினும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கு இடமில்லை என்பதை முழுமையாக செய்து காட்டியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர் தகுந்த தொழில் திட்டங்களுடன் 25 விழுக்காடு தொகையுடனே முன்வருவார்களானால், தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடன் கையகப்படுத்தி தொழிற்பேட்டை ஒன்றினை நிறுவ சிட்கோ தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 14, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

14—

குன்னத்தூர் ஊராட்சிப் பள்ளிகளில் சத்துணவுக்கூடம் கட்ட நடவடிக்கை

*21538—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, குன்னத்தூர் ஊராட்சி பள்ளிகளில் சத்துணவுக்கூடம் கட்ட அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டப்படும்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியிலுள்ள குன்னத்தூரில் சத்துணவு கூடம் கட்டித்தர இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. ஆனால் ஏழையின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன் என்று ஏழைகளின் சிரிப்பை அர்த்தமாக்கியவர் எங்களது நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு அவினாசி தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து கோவை மாவட்டத்தில் இந்தச் சத்துணவுக் கூடங்களை கட்டித் தர தொழில் அதிபர்கள் முன்வந்ததை நாங்கள் அறிகிறோம். அப்படியானால், எத்தனை தொழில் அதிபர்கள் இந்த கட்டிடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அவினாசி தொகுதியில் மட்டுமல்ல, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள், நீங்கள் குன்னத்தூரில் சத்துணவுக்கூடம் கட்டுவது பற்றி கேள்வி கேட்டுள்ளீர்கள். கோவை மாவட்டம் முழுவதும் எத்தனை தொழில் அதிபர்கள் முன்வந்தார்கள் என்கின்ற கேள்விக்குப் பதில் கிடைக்காது. அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னத்தூரில் கட்டியிருக்கின்ற கட்டடம் எவ்வளவு கட்டப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னத்தூரில் ஊராட்சி பள்ளியில் சத்துணவுக்கூடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு ஆவன செய்து அதற்கு சமையல் அறை கட்டுவதற்கு 25 ஆயிரம் ரூபாயை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1991-92ல் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால், 147 குழந்தைகள் நல மையங்களும், 336 பள்ளி மையங்களும், 1992-93-ல் 53 குழந்தைகள் நல மையங்களும், 84 பள்ளி சத்

துணவு மையங்களும், 15 லட்சம் ரூபாயில் தொழில் அதிபர்களால் தத்து எடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுக் கூடங்களை கட்டித் தருவதாக கூறிய அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் மற்ற மாவட்டங்களில் அமல்படுத்தியதுபோல் கோவை மாவட்டத்தில் இந்தச் சத்துணவு மையங்களில் அமல்படுத்தப்படுமா என்பது பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு கோவை மாவட்டம் எடுக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு அந்தப் பணி நடந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

15—

அனைத்து கல்வி நிலையங்களிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம்.

*10280—திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்றோர் ஆசிரியர் கழகம் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் உள்ளனவா?

(ஆ) பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்கு கல்வி பேணுதலை மேற்பார்வையிடும் அதிகாரம் வழங்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கி இந்த வினாவுக்கு விடை அளிக்கிறேன்.

(அ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் அமையவேண்டுமென்று